மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல். 2019

பயிற்சிப்பரீட்சை - 01

ஆசிரியர்- பொ.சிவபாதம்.
9/5, கலைவாணி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்

1மணித்தியாலம் 15நிமிடம்

வினாத்தாள் II

சுட்டெண்.....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளிலே 59 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்குமான விடையினையும் வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலுக்கமைய விடையளிக்க.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான வினாக்களின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப்புள்ளிகள்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (.....) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு ஏற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர். மதிப்பிட்ட வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	..... பெயர் ..... ஒப்பம்
மேற்பார்வையாளர்	
பாடசாலை/ கல்வி நிலைய மேற்பார்வையாளர்	

ஆரணி பதிப்பகம், 141/10, கண்டி வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி. 0779235807 /0772959958

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) பின்வரும் பந்தியை நன்றாக வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு பந்தியிலிருந்து தெரிவு செய்து விடை எழுதுக.

நீர் நிலையில் ஒரு கொக்கு அசைவின்றி அடக்கமாக நிற்கின்றது. சிறிய மீன்கள் அங்குமிங்கும் ஓடித்திரிகின்றது. இதை அவதானித்து பெரிய மீன் ஒன்று அவ்விடத்திற்கு வந்ததுமே கொக்கு உடனே அந்த மீனை கொத்தியெடுத்து இரையாக்கிக் கொள்ளும். அது போலவே அடக்கமாக இருப்பவர்கள் அறிவில்லாதவர்கள் என்று எண்ணி விடவேண்டாம். அவர்கள் தக்க சமயத்தில் தமது காரியத்தை நிறைவேற்றி விடுவர்.

i. ஒற்றைக்கொம்பும் அரவும் மாத்திரம் இடம்பெற்றுள்ள சொல்லைத் தெரிவு செய்க.

…….

ii. உணவு என்பதன் ஒத்தபதச்சொல் யாது?

……..

iii. இணைமொழிச் சொல்லைத் தெரிவு செய்க.

…….

iv. அ.ஃறிணை ஒருமைப் பெயர்ச்சொல்லை தெரிவு செய்க.

……

v. பெயரடைமொழிச் சொல்லைத் தெரிவு செய்க.

…….

vi. அசைவின்றி என்பதனை பிரித்தெழுதுக.

…… (6×1=6 புள்ளிகள்)

2) தரப்பட்டுள்ள தொடர்களுக்குரிய தனிச்சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

i. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா ……(வெள்ளி விழா, பொன்விழா)

ii. வாட்டசாட்டம் என்னும் மரபுத்தொடரின் கருத்து…… (வறுமையால் வாடல், தோற்றப்பொலிவு)

iii. அரண்மனையில் அரச பெண்கள் தங்குமிடம்…… (அந்தப்புரம், ஆச்சிரமம்)

iv. கிராமிய மக்களின் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பாடல்…….. (நாட்டார் பாடல், மெல்லிசைப்பாடல்)

(4×1=4 புள்ளிகள்

சுட்டெண்- .....

3) பின்வரும் பாடல்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.

i. நஞ்சைக் கக்கும் நாக பாம்பு
நடிக்கும் மயிலைப் பார்க்குது
.....
அருகில் நின்று பார்க்குது.

ii. கரம்பு நிலத்தை உழவனும்
.....
கரும்பும் நெல்லும் விளைந்திடும்
களனியாக மாற்றின (2×2=4 புள்ளிகள்)

4) சிங்கம் - கர்ச்சிக்கும் அது போல மயில் - .....
(1 புள்ளி)

5) வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து அதனை **இடைவெளியில் எழுதுக.**

i. வைத்தியர் - நோயாளி என்பது போல ஆசிரியர் - ..... (மருந்து, மாணவர்)

ii. ஒன்றுபட்டால் உண்டு ..... (வாழ்வு, வால்வு)

iii. **'பாடினாள்'** என்பது .....……..…….. (இறந்தகால ஒருமை வினைச்சொல், இறந்தகால பன்மை வினைச்சொல்)

(3×1=3 புள்ளிகள்)

6) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் கருத்தை தெளிவாக எழுதுக.

i. இ.ம.வ .....

ii. ம.ப.பா .....

(2×1=2 புள்ளிகள்)

7) பின்வரும் திருக்குறளைப் பூர்த்தி செய்க.

i. 'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
..... நன்று'

ii. 'எந்நன்றி கொன்றார்க்கு .....
செய்ந்நன்றி கொன்ற மகற்கு' (2×1=2 புள்ளிகள்)

8) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையினை வெற்றிடங்களில் எழுதுக.

i. அல்லும் பகலும் நல்ல … என்னும் பாடலினை பாடியவர் -
……..

ii. ‘சத்திய சோதனை’ என்னும் சுயசரிதை யாரால் எழுதப்பட்டது -
…….

iii. துரியோதனன் செய்த உதவிக்காக செய்ந்நன்றி மறவாத வீரன் யார் -
…….

(3×1=3 புள்ளிகள்)

9) பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓரெழுத்து விடப்பட்டுள்ளது. அவ்வெழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.

i. hospi…..al
ii. ani……al

(2×1=2 புள்ளிகள்)

10) பின்வரும் சொற்களினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

i. தை- ……..
ii. தீபாவளி-…… (2×1=2 புள்ளிகள்)

11) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

நாம் விளையாட்டு மைதானத்திற்கு செல்வோமா?
……

(2 புள்ளிகள்)

12) பின்வரும் சொற்களை சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i. வாழைப்பழம் - ……..
ii. பாற்சோறு - ……..

(2×1=2 புள்ளிகள்)

13) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

மட்ட கொல பாட்ட பொதக் தென்ன
……..

(1 புள்ளி

14) **நான் ஒரு விளையாட்டு வீரன் ஆனால்...** என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

i. ……
……

ii. ……
……

iii. ……
……

(3×2= 6 புள்ளிகள்)

❖ தரப்பட்ட வெற்றிடத்தில் விடையை எழுதுக.

15) தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக.

5793
……

16)

2	0
8	9

கட்டத்திலுள்ள எண்களைப் பயன்படுத்தி மிகப்பெரிய எண்ணை எழுதுக.

……

17) X இவ் உரோம எண்ணை ஒன்றினால் பெருக்கினால் கிடைக்கும் விடையினை உரோமன் எண்ணில் எழுதுக.

……

18) தொழிற்சாலை ஒன்றில் ஒரு வகையில் 2550 காலணிகளையும் இன்னொரு வகையில் 3500 காலணிகளையும் விநியோகித்தது. விநியோகிக்கப்பட்ட காலணிகளின் மொத்த எண்ணிக்கையுடன் மேலும் ஒன்றைக் கூட்டுக.

……

19) வெற்றுக்கூடுகளை நிரப்புங்கள்.

8	7	2	0	–
2	5	□	□	
6	2	0	3	

20) 1km 50m ஐ மீற்றரில் எழுதுக……

21)



1. இவ் செவ்வகத்தின் சுற்றளவு யாது?
……
2. இச் செவ்வகத்தின் பரப்பளவு யாது?
……

22) ஒரு பிள்ளைக்கு 5 இனிப்புக்கள் வீதம் 687 இனிப்புக்களை எத்தனை பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிக்கலாம்? எஞ்சிய இனிப்புக்களின் எண்ணிக்கை யாது?

……பிள்ளைகளுக்கு, ……மீதி

23) 

1. இத்திண்ம உருவின் பெயர் என்ன?
   ……
2. இத்திண்ம உருவில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ……

24) 9540 உடன் 805 ஐ கூட்டுக. கூட்டுத்தொகை யாது?
……...

25) 6045 இலிருந்து 350 ஐ கழிக்க. வித்தியாசம் யாது?
……

26) எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் வெற்றிடத்தில் முறையே எழுதுக.
3050, 3060, 3070, 3080, ……., ……

27) ஒரு வகுப்பறையில் இரண்டு கதிரைகள் வீதம் உள்ள 12 நிரைகளும் 3 கதிரைகள் வீதம் உள்ள 6 நிரைகளும் உள்ளன. அந்நிரைகளில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?

……

28) 

1. இவ் உருவில் நிழற்றப்பட்ட பகுதியினைப் பின்னமாகத் தருக.
   ……
2. இவ் உருவில் நிழற்றப்பட்ட பகுதியினைத் தசம எண்ணாகத் தருக.
   ……

29) பெருக்கல் ▲ என்னும் குறியினாலும் ■ பிரித்தல் என்னும் குறியினாலும் குறிக்கப்படும் எனின் பின்வருவதன் பெறுமானத்தை தருக.

72■ 9▲ 8 = ……... (15×2=30 புள்ளிகள்)

❖ 30 தொடக்கம் 59வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30) இலங்கையின் தேசிய மலர் எது?
1.அல்லி 2. நீலோற்பலம் 3. வெசாக் பூ 4. வெட்சி

31) வேம்பு, முருங்கை என்னும் தாவரங்கள் பூக்கும் மாதம் எது?
1. வைகாசி 2. சித்திரை 3. மாசி 4. கார்த்திகை

32) காற்றின் மூலம் பரவலடையும் தாவரம் எது?
1. மரமுந்திரிகை 2. தேக்கு 3. கொய்யா 4. எருக்கலை

33) நத்தைகளை ஓட்டிலிருந்து வெளியே எடுத்து உண்ணும் பறவை எது?
1. ஆந்தை 2. செண்பகம் 3. பருந்து 4. கிளி

34) இரவு, பகலில் பூக்கும் தாவரங்கள் முறையே அமையும் விடையைத் தெரிவு செய்க.
1. மல்லிகை, கடுபுல் 2. கடுபுல், முல்லை
3. கடுபுல், செவ்வந்தி 4. தாமரை, செவ்வந்தி

35) இறைச்சியினை மாத்திரம் உண்ணும் பறவையினை கொண்டமைந்த சோடியினைத் தெரிவு செய்க.
1. செண்பகம், கிளி 2. பருந்து, கழுகு 3. வௌவால், கிளி 4. வாத்து, கோழி

36) செங்குத்தாக நீந்தக்கூடிய கடல் வாழ் உயிரினம் எது?
1. மீன் 2. ஆமை 3. கடற்குதிரை 4. சுறா

37) பாடசாலைக்கு ஆற்றவேண்டிய கடமைகளும் பொறுப்புக்களுமாக அமையாதது
1. இலவசப் பாடநூல்களைப் பாதுகாத்தல்.
2. வகுப்பறைச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.
3. சக மாணவர்களிடம் நட்புடன் உறவாடுதல்.
4. பாடசாலையின் கௌரவத்தைப் பாதுகாத்தல்

38) இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் நாடு எது?
1. இந்தியா 2. அமெரிக்கா 3. இலங்கை 4. மாலைதீவு

39) இலங்கையின் அழகான, உயரமான நீர்வீழ்ச்சி எவையென முறையே தெரிவு செய்க.
1. பம்பரகந்த, துன்கிந்த 2. விக்டோரியா, பம்பரகந்த
3. துன்கிந்த, பம்பரகந்த 4. தியலும, விக்டோரியா

40) தேசப்படத்தில் நதிகளைக் குறிக்கப் பயன்படும் நிறம் எது?
1. சிவப்பு 2. நீலம் 3. பச்சை 4. மஞ்சள்

41) வடக்குத்திசையை அறிய உதவும் உடுத்தொகுதி எது?
1. பெருங்கரடி 2. கார்த்திகை 3. தென்சிலுவை 4. ஓராயன்

42) வித்துக்களைப் பயன்படுத்திச் செய்யும் ஆக்கம் எது?
1. கொலாஜ் 2. அல்பனா 3. ஒரிகாமி 4.அச்சுப்பதித்தல்

43) தேசிய அடையாள அட்டையை வழங்கும் நிறுவனம் எது?
1. ஆட்பதிவுத் திணைக்களம் 2. அஞ்சல் திணைக்களம்
3. பொதுச் சுகாதார அலுவலகம் 4. பிரதேச செயலகம்

44) எமக்கு இலவசமாகக் கிடைக்கும் இரு சேவைகளைக் கொண்டமைந்த விடையைத் தெரிவு செய்க.
1. பேருந்து, சுகாதாரம் 2. கல்வி, சுகாதாரம்
3. சுகாதாரம், புகையிரதம் 4. கல்வி, தொலைபேசி

45) மிகவும் தூய்மையான நீர் எது?
1. ஓடும் நீர் 2. குளிர் நீர் 3. மழை நீர் 4. உவர் நீ

46) நீரில் மிதக்கும் பொருட்களைக் கொண்டமைந்த தொகுதியினைத் தெரிவு செய்க.
1. பந்து, றெஜிபோம், பலகைத்துண்டு, இலைகள்
2. பந்து, றெஜிபோம், பலகைத்துண்டு, இரும்பு
3. பந்து, றெஜிபோம், கண்ணாடித்துண்டு, இலைகள்
4. பந்து, புளி, பலகைத்துண்டு, கல்

47) அதிகளவு புரதத்தைக் கொண்டதும் ஏழைகளின் இறைச்சி எனவும் அழைக்கப்படும் தாவரம் யாது?
1. வாழைப்பழம் 2. காளான் 3. ஈரப்பலா 4. முட்டை

48) இலங்கையில் மண்சரிவு ஏற்படக்கூடிய இடமாக அமைவது.
1. கண்டி 2. யாழ்ப்பாணம் 3. காலி 4. கொழும்பு

49)

இப்படத்தில் காணப்படும் விளையாட்டில் பங்கு கொள்ளும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 3 2. 6 3. 7 4.11

50) மரச்செதுக்கல் வேலைப்பாட்டிற்கு புகழ் பெற்ற தேவாலயம் எது?
1.தலதாமாளிகை 2. யாப்பகூவ 3. அம்பக்க 4. மடு தேவாலயம்

51) பின்னவல யானைகள் சரணாலயம் அமைந்துள்ள மாவட்டம் எது?
1. கேகாலை 2. கண்டி 3. பதுளை 4. மாத்தளை

52)
இப்படத்தில் காணப்படும் உபகரணத்தை பயன்படுத்துபவர் யார்?
1. தச்சன் 2. கொத்தன் 3. ஓடாவி 4. உழவர்

53) இலங்கைத் தேசியக்கொடியில் பச்சை நிறத்தால் குறிக்கப்படும் இனத்தவர் யார்?
1. சிங்களவர் 2. முஸ்லீம் 3.தமிழர் 4. பறங்கியர்

54) இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு எது?
1. 1948 2. 1972 3. 1815 4. 1796

55) 2020 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டி நடைபெறவிருக்கும் நாடு எது?
1. பிறேசில் 2. சீனா 3. இங்கிலந்து 4. ஜப்பான்

56) றம்பொடை சுரங்கப்பாதை பொறிக்கப்பட்டுள்ள நாணயத்தாள் எது?
1. ஐந்நூறு 2. நூறு 3.ஆயிரம் 4. ஐந்தாயிரம்

57) கட்புல செவிப்புல சாதனமாக அமைவது எது?
1. வானொலி 2. தொலைக்காட்சி 3. பத்திரிகை 4. ஒலிபெருக்கி

58) மனிதனின் உடல் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் உணவு எது?
1. வல்லாரை 2. பருப்பு 3. சோறு 4. மாம்பழம்

59) எமக்குத் தகவல்களை நேரடியாக வழங்கத்தக்க ஓர் ஊடகம்
1. பத்திரிகை 2. கையேடுகள் 3. வானொலி 4. அறிவித்தல்

(30×1=30 புள்ளிகள்)